செய்தி வெளியீடு எண். 38 நாள்: 19.01.2018

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து அவர்கள் தலைமையில் இன்று (19.01.2018) நடைபெற்றது.

முன்னதாக வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் அவர்கள் அதிக நீர் செலவில்லாமல் குழிதட்டில் நாற்று நட்டு விவசாய நிலத்தில் நர்சரி அமைத்து காய்கறி சாகுபடி செய்யும் முறையை விளக்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கூறியதாவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை நெற் பயிரில் மொத்தம் 77,694 ஹெக்டெரும், திருந்திய நெற்பயிரில் 52,309 ஹெக்டெரும், சிறுதானியங்கள் 770 ஹெக்டேரும், பயறுவகைகள் 1,561 ஹெக்டேரும், எண்ணைய்வித்துக்கள் 4,179 ஹெக்டெரும், கரும்பு நடவு 496 ஹெக்டேரும், மறுதாம்பு 4,924 ஹெக்டேரும் பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 89,624 ஹெக்டெர் ஆகும். தென்மேற்கு பருவ மழை மற்றும் வடகிழக்கு பருவமழை இயல்பை விட அதிக அளவில் மழை பெறப்பட்டுள்ளது.

சம்பா பருவத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இதுவரை 73,950 ஏக்கர் பரப்பில் 30,345 விவசாயிகள் பயிர்காப்பீடு செய்து முடித்துள்ளனர். மேலும், நெற்பயிர், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள் மற்றும் கரும்பு பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் 15.02.201. கடன் பெறாத விவசாயிகள் எளிதில் பயிர் காப்பீடு செய்து கொள்வதற்கு ஏதுவாக அந்தந்த வட்டாரங்களில் இயங்கும் பொது சேவை மையங்கள் மற்றும் பொது சேவை முகவர்கள் ஆகியோரை அணுகி பயிர் காப்பீடு செய்வதற்கு உரிய ஆவணங்களுடன் பதிவு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து Crop insurance Portal என்ற இணையதள வலைதளத்தில் விவரங்களை பதிவேற்றம் செய்து பயிர் காப்பீடு செய்து பயன்பெற வேண்டும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகள் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிகளில் வங்கி கணக்கு ஆரம்பித்து பான் எண் மற்றும் ஆதார் எண் நகல் வங்கி சேமிப்பு கணக்கு புத்தக நகல், கணிப்பொறி சிட்டா மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பயிர் சாகுபடி அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை அணுகி பயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கூட்டுப்பண்ணையத் திட்டம் செயல்படுத்திட வேளாண்மை துறையின் மூலம் 45 உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்களும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 11 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் ரூபாய் 5.00 இலட்சம் நிதி மூலதனம் வழங்கப்பட்டு அதன் மூலம் அக்குழு விவசாயம் சார்ந்த பணிகளுக்காக இடுபொருட்கள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

நேரடி உரமானிய திட்டம் திருவள்ளுர் மாவட்டத்தில் அறிமுக படுத்தப்பட்டு தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையங்களில் விற்பனை முனை கருவிகள் பயன்படுத்தும் முறை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு தற்போது உரங்கள் விற்பனை முனை கருவிகள் மூலமே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்கள் ஆதார் எண் மற்றும் கை விரல் ரேகை பதிவு மூலம் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையங்களில் தேவையான உரங்கள் விலைக்கு வாங்கி கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கூறினார்.

பின்னர் கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அட்மா திட்டத்தின் கீழ் வட்டம் மற்றும் மாவட்ட அளவில் விவசாய பிரதிநிதிகளை நியமித்தல், டாப்செட்கோ மூலம் சிறு குறு விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்குதல், பிரதம மந்திரி காப்பீட்டு திட்டத்தின்கீழ் காப்பீடு செய்து காப்பீடு தொகை பெறாத விடுபட்ட விவசாயிகளுக்கு இழப்புத் தொகை வழங்கவும், இறால் மற்றும் வண்ணமீன் பண்ணைகளை அகற்றவும், நீர் ஆதாரங்களான ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் நீர்வரத்துக்கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், தடுப்பணை கட்டுதல், வரத்துக்கால்வாய், ஏரி குளங்களை சீர் செய்தல், கடன் கோரும் விவசாயிகளிடம் தடையில்லா சான்று கோருவதை தவிர்த்தல், தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சரிசெய்தல் மற்றும் கால்நடை பவுண்டு அமைத்தல் போன்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொறுப்பு) திரு பிரதாப ராவ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தமிழ்செல்வி, வேளாண்மை துணை இயக்குநர் (பொறுப்பு) மாநில திட்டம் திரு.எம்.ராகவேந்திர ராவ், அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**